தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சை, எதிர்பார்ப்பு வினாக்கள்

ஆக்கம் :- ஆசிரியர் :- P. அம்பிகைபாகன்

01) 31 நாள்கள் உள்ள ஒரு மாதத்தில் மூன்றாவதாக வரும் வெள்ளிக்கிழமை 17ஆம் திகதி ஆயின் அம்மாதத்தின் முதல், நடு, இறுதி நாள்களைக் குறிக்கும் கிழமைகள் யாவை?

.....

02) (பு, ப, மை, சி, ரி, ல, ல், ப்) இங்கு தரப்பட்டுள்ள எட்டு எழுத்துக்களையும் ஒழுங்குபடுத்தி எழுதினால் கிடைக்கும் சொல் யாது?

.....

03) 003 இலிருந்து 300 வரையிலான எண்களை எழுதும்போது 3 எனும் இலக்கம் எத்தனை தடவைகள் இடம்பெறும்?

.....

04) மூன்று வரிசைகளில் முறையே 86, 87, 88 பேர்கள் நின்றார்கள், நடுவில் ஒரு பெண் மாத்திரம் நிற்கின்ற வரிசையில் உள்ளவர்கள் எத்தனை பேர்?

.....

05) $(A + B) = 13, (B + C) = 15, (A + C) = 12$ ஆகுமெனில் $(A + B + C)$ இன் பெறுமதியைக் தருக.

.....

06) குமார், மணி, அகமட் எனும் மூவரிடமும் உள்ள பணத்தின் மொத்தத் தொகை ரூபா. 365 ஆகும். குமாரைவிட மணியிடம் ரூபா. 15 அதிகமாக உள்ளது. மணியைவிட அகமட் இடம் ரூபா. 35 அதிகமாக உள்ளது. குமார், மணி, அகமட் மூவரிடமும் உள்ள பணத்தொகையை முறையே தருக.

.....

07) ஒரு உயர்ந்த மாடி வீட்டுத்தொகுதியில் குடியிருக்கும் கணேஸ், வித்தியா எனும் இருவரில் கணேஸ் மேலிருந்து கீழாக 14 ஆவது மாடியில் இறங்கிக்கொண்டிருந்தார். வித்தியா கீழிருந்து மேலாக 13 ஆவது மாடியில் ஏறிக்கொண்டிருந்தார். உண்மையாக அவர்கள் இருவரும் அவ்வீட்டுத்தொகுதியின் நடுவிலேயே தற்சமயம் நிற்கின்றார்கள். அவ்வீட்டுத்தொகுதியிலுள்ள மாடிகளின் எண்ணிக்கை யாது?

.....

08) நிமலன் பிறக்கும்போது அவனுடைய தந்தையாரின் வயது 32 ஆகும். நிமலனின் தங்கை பிறக்கும்போது அவனுடைய தாயாரின் வயது 30 ஆகும். நிமலனின் தற்போதைய வயது 6 ஆகும். நிமலனைவிடத் தங்கை இரண்டு வருடங்கள் இளையவள். அவனது தந்தையை விடத் தாய் எத்தனை வருடங்கள் இளையவள்?

.....

09) ஒன்பது சம சதுரங்கள் நிரல், நிரை சமனாக வைத்து செய்யப்பட்ட சதுரத்தின் சுற்றளவு 36cm ஆகும். அதில் ஒரு சதுரத்தின் சுற்றளவு யாது?

.....

info@ivinstamil.com IVinsTamil iVinsTamil

LEARN EASY

- KNOWLEDGE IS POWER -

www.learneasy.lk

zoom

மகத்தான கல்விக்கு
உங்கள் ஆசான்

- ICT
- Maths
- English
- Commerce
- Tamil
- History
- Science
- Sinhala
- இன்னும் பல

Medium

தமிழ்/ English

தரம்
01-A/L

76667-4945

தனித்துவமான புலமைப்பரிசில் பரீட்சை வகுப்புக்கள்
தரம் 1 தொடக்கம் 5 வரை நடைபெறுகின்றன

www.learneasy.lk || www.lkedu.lk

	நிரல் 1	நிரல் 2	நிரல் 3	நிரல் 4
நிரை 1	A	B	C	D
நிரை 2	அ	ஆ	இ	ஈ
நிரை 3	1	2	3	4

இக்கோலத்தில்

படிமுறை :- 01
முதலாம் நிரல் இருக்கும் இடத்திற்கு நான்காம் நிரலும், நான்காம் நிரல் இருக்கும் இடத்துக்கு முதலாம் நிரலும் இடம்மாறுகின்றன.

படிமுறை :- 02
முதலாம் நிரை இருக்கும் இடத்திற்கு மூன்றாம் நிரையும், மூன்றாம் நிரை இருக்கும் இடத்துக்கு முதலாம் நிரையும் இடம்மாறுகின்றன.

படிமுறை :- 03
இரண்டாம் நிரல் இருக்கும் இடத்திற்கு மூன்றாம் நிரலும், மூன்றாம் நிரல் இருக்கும் இடத்துக்கு இரண்டாம் நிரலும் இடம்மாறுகின்றன.

10) மாற்றங்கள் செய்ததன் பின்னர் இரண்டாம் நிரலில், மூன்றாம் நிரையில் உள்ளது யாது?

.....

11) ஆரம்பத்தில் (இ) இருந்த இடத்தில் தற்போது உள்ளது யாது?

.....

12) ஒரு வாழைப்பழத்தின் விலை ரூபா. 15 ஆகும். ஒரு கொய்யாப்பழத்தின் விலை ரூபா. 35 ஆகும். வாழைப்பழம், கொய்யாப்பழம் ஆகியவற்றில் ஒரு குறித்த எண்ணிக்கையை வாங்குவதற்கு மாலா செலவிட்ட பணம் ரூபா. 165 ஆகும். மாலா வாங்கிய வாழைப்பழங்களின் எண்ணிக்கை யாது?

.....

13) 29 நாள்கள் கொண்ட ஒரு மாசி மாதத்தில் நடுநாள் செவ்வாய்க்கிழமை ஆயின், அம்மாதத்தின் முதல் இறுதி நாட்கள் குறிக்கும் கிழமைகள் யாவை?

.....

14) ஒரு சதுர வடிவம் அதற்குரிய 4 சமச்சீர் அச்சுக்களில் நேர்கோடு கீறிப் பிரிக்கப்பட்டால் அவ்வுருவிலுள்ள முக்கோணிகளின் மொத்த எண்ணிக்கை யாது?

.....

15) இரு இலக்கங்களை கூட்டினாலும் அல்லது பெருக்கினாலும் ஒரே எண் விடையாகக் கிடைக்கும் அவ்விரு எண்களும் எவை?

.....

16) ஒன்று, இரண்டு, மூன்று ஆகிய இலக்கங்களைப் பயன்படுத்தி மூவிலக்க எண்கள் இரண்டு ஆக்கப்பட்டன. அவ்வெண்களின் முதல் இலக்கத்தை மூன்றாம் இலக்கத்திலிருந்து கழித்தால் நடு இலக்கம் கிடைக்கும். அவ்விரு மூவிலக்க எண்களையும் எழுதுக.

.....

info@ivinstamil.com IVinsTamil iVinsTamil

17) சங்கரன் முதல் நாளில் ஓர் உண்டியலில் ரூபா. 5ஐ இடுகின்றான். அவன் அதன் பின்னர் ஒவ்வொரு நாளும் முந்திய நாளிட்ட பணத்திலும் பார்க்க ரூபா. 5 வீதம் கூடுதலாக உண்டியலில் இடுகின்றான். இவ்வாறாக உண்டியலில் சேரும் மொத்தப்பணம் எத்தனையாம் நாளில் ரூபா. 140 ஆகும்.

.....

18) நான்முகியின் உச்சிகளின் எண்ணிக்கையின் இருமடங்கு எண்ணிக்கையான உச்சிகளைக் கொண்ட இரு உருவங்களின் பெயர்கள் தருக.

.....

19) மாலை மூன்று மணிக்கு கடிகாரத்தின் மணிமுள் காட்டுவது கிழக்குத் திசையாகும். அதே மணிமுள் அன்றைய தினம் இரவு 10.30 க்கு காட்டும் திசை யாது?

.....

20) ஒரு மைதானத்தின் ஓரிடத்திலிருந்து வடக்குத் திசையில் சென்றால் A எனும் விளையாட்டு வீரன் நிற்கும் இடத்தை அடையலாம். அல்லது அவ் ஓரிடத்திலிருந்து கிழக்குத் திசையில் சென்றால் B எனும் விளையாட்டு வீரன் நிற்கும் இடத்தை அடையலாம். B எனும் விளையாட்டு வீரன் A எனும் விளையாட்டு வீரன் நிற்கும் இடத்தை அடைவதற்கு எத்திசையில் செல்ல வேண்டும்?

.....

21) ஒரு மைதானத்தில் அமலன் உட்பட ஒரு பக்கம் 8 பேர் வீதம் சதுரமாக 32 பேர் அமர்ந்திருந்தார்கள். அவர்கள் எல்லோரும் அமலனிலிருந்து 1, 2, 3 ..... எனக் கூறியவாறு சதுர வடிவைச் சுற்றி இரு தடவைகள் எண்ணுகின்றனர். முதற் சுற்றில் 1 எனக்கூறி எண்ணும் அமலன் இரண்டாம் சுற்றில் எண்ணும் போது கூறும் இலக்கம் யாது?

.....

22) ஒரு மாதத்தின் 10 ஆந் திகதியிலிருந்து 20 ஆந் திகதிவரை உள்ள எல்லாத்திகதிகளினதும் கூட்டுத்தொகை யாது?

.....

23) 1 தொடக்கம் 35 வரையுள்ள எல்லா ஒற்றை எண்களினதும் கூட்டுத்தொகை எவ்வளவு?

.....

24) கொரோனா தொற்று நோய் காரணமாக எமது நாட்டின் ஒரு பிரதேசம் ஆகஸ்ட் 4ஆம் திகதியிலிருந்து 16 நாள்கள் முடக்கப்பட்டன. முடக்கத்திலிருந்து மீளப்பட்ட நாள் வியாழக்கிழமையாயின் முடக்கம் ஆரம்பிக்கப்பட்ட கிழமை நாள் யாது?

.....

25) நான், தம்பி, தங்கை மூவரும் ஒரு பேருந்தில் ஏறுவதற்காக ஒரு வரிசையில் நின்றோம். அவ்வரிசையில் எனக்குப் பின்னால் 8 பேரும், தம்பிக்கு முன்னால் 6 பேரும் நின்றனர். எனக்கும் தம்பிக்கும் இடையில் தங்கை நின்றாள். அவ்வரிசையின் நடுவில் நின்றவர் யார்?

.....

info@ivinstamil.com IVinsTamil iVinsTamil

❖ **A, B, C, D, E எனும் ஐந்து மாணவர்கள் ஒரு வரிசையில் ஒழுங்கில் நிற்கின்றார்கள். பின்வரும் நான்கு படிமுறைகளில் அவர்கள் தங்களுடைய இடங்களை மாற்றிக்கொண்டார்கள்.**

படிமுறை 1) Aயும், Eயும்
படிமுறை 2) Bயும், Dயும்
படிமுறை 3) Eயும், Cயும்
படிமுறை 4) Eயும், Aயும்

26) நான்கு படிமுறை மாற்றங்களின் பின் மீண்டும் தனது ஆரம்ப இடத்தை அடைந்தவர் யார்?

.....

27) ஆரம்பத்தில் B என்பவர் நின்ற இடத்தில் தற்பொழுது நிற்பவர் யார்?

.....

28) சமயலறையில் வெண்டிக்காய், கத்தரிக்காய், போஞ்சிக்காய், பாகற்காய், கோவா எனும் ஐந்து வகையான மரக்கறிகள் இருந்தன. அம்மா அவற்றுள் இரு மரக்கறிகளை மாத்திரம் அன்றைய சமையலுக்கு தெரிவு செய்ய வேண்டியுள்ளது. அம்மா அதனை ஒன்றிலிருந்து ஒன்று வேறுபட்டதாக எத்தனை விதங்களில் தெரிவு செய்யலாம்?

.....

29) சீதா, பாத்திமா, கீதா, மேரி, மாதா என்னும் ஐந்து மாணவிகளுள் சீதா கீதாவைவிட மூத்தவள் ஆயினும் மாதாவை விட இளையவள். பாத்திமா கீதாவிலும் இளையவள் ஆயினும் மேரியைவிட மூத்தவள். இவர்களுள் மூத்தவளையும் இளையவளையும் குறிக்கும் பெயர்களை எழுதுக.

.....

30) வாளி, குறடு, ஏணி, கிணறு, கப்பி, படிக்கட்டு இச்சொற்களில் மூன்று சொற்களை ஒரு கூட்டமாகவும், வேறு இரு சொற்களை இன்னொரு கூட்டமாகவும் வேறுபடுத்தலாம். அவ்விரு கூட்டங்களையும் சேராத சொல் எது?

.....

31) எண்கள் 11 தொடக்கம் 111 வரையுள்ள எண்ணும் எண்களை எழுதும்போது இலக்கம் 1ஐ எழுத வேண்டிய தடவைகளின் எண்ணிக்கை யாது?

.....

32) ஒரு மாணவன் காலையில் வீட்டிலிருந்து பாடசாலை செல்வதற்குள் சில சந்திகளைக் கடந்து சென்ற விதம் கீழேயுள்ளன :-
அவன் புளியடிச் சந்தியைக் கடந்த பின் வேம்படிச் சந்தியைக் கடந்தான். ஆலடிச் சந்தியைக் கடப்பதற்கு முன்பு இலுப்பையடிச் சந்தியைக் கடந்தான். அவன் இலுப்பையடிச் சந்தியைக் கடந்தது வேம்படிச் சந்தியைக் கடந்த பின்னராகும். அவன் மாலையில் பாடசாலையிலிருந்து வீட்டுக்கு திரும்பி வரும்போது கடந்து வந்த சந்திகளின் பெயர்களை ஒழுங்கில் எழுதுக.

.....

33) M, A, E, T, X, W ஆகிய ஆங்கில எழுத்துக்களை முகம் பார்க்கும் கண்ணாடிக்கு முன்னால் காட்டினால் விம்பமாகத் தெரியும் எழுத்துக்களில் வித்தியாசமாகத் தெரியும் எழுத்து எது?

.....

info@ivinstamil.com IVinsTamil iVinsTamil

34) எனது தங்கைக்கு மூன்று சகோதரர்களும், எனது தம்பிக்கு மூன்று சகோதரிகளும் உள்ளனர். எனக்கு உள்ள குறைந்தபட்ச சகோதரர்களினதும், சகோதரிகளினதும் எண்ணிக்கையை முறையே தருக. நான் எனது குடும்பத்தில் மூத்தவள் ஆவேன்.

.....

35) எங்களுடைய பண்ணையிலுள்ள ஆடுகளின், மாடுகளின் மொத்த எண்ணிக்கையானது பண்ணையிலுள்ள மாடுகளின் எண்ணிக்கையின் இரு மடங்காகும். இதற்கேற்ப ஆடு, மாடுகளின் எண்ணிக்கையை ஒப்பிட்டு சரியான கூற்று ஒன்று எழுதுக.

.....

36) 01 இலிருந்து 25 வரையிலான எண்ணும் எண்களின் நடு எண்ணையும், 01 இலிருந்து 35 வரையிலான எண்ணும் எண்களின் நடு எண்ணையும் கூட்டினால் கிடைக்கும் விடையின் இரு மடங்கு எவ்வளவு?

.....

37) திங்கட்கிழமையிலிருந்து ஞாயிற்றுக்கிழமை வரையிலான ஏழு நாட்களைக் கொண்ட ஒரு வாரத்தில் கமலா தொடர்ச்சியாக நான்கு நாட்கள் காய்ச்சலால் பீடிக்கப்பட்டு இருந்தாள். இதற்கேற்ப கமலா சந்தேகமின்றிக் காய்ச்சலால் பீடிக்கப்பட்டு இருந்த ஒரு நாளாகக் கூறக்கூடிய கிழமை நாள் யாது?

.....

38) கவின், கரன், நவின் எனும் மூவர் தம்மிடமிருந்த பணத்தை ஒன்று சேர்த்த போது ரூபா. 320 ஆகியது. ஆயினும் ஆரம்பத்தில் கவினைவிடக் கரனிடம் ரூபா. 10 அதிகமாகவும், நவினிடம் ரூபா. 20 குறைவாகவும் இருந்தன. எனவே ஆரம்பத்தில் கவின், கரன், நவின் ஆகிய மூவரிடமும் இருந்த பணத்தொகைகளை முறையே தருக.

.....

39) 365 நாட்கள் கொண்ட ஒரு வருடத்தில் நடுநாள் வியாழக்கிழமையாயின் அவ்வருடத்தின் ஜனவரி 01ஆம், டிசெம்பர் 31 ஆம் திகதிகள் குறித்து காட்டும் கிழமைகள் யாவை?

.....

40) காசு இல்லாமல் இருந்த எமது தங்கைக்கு நானும் தம்பியும் எம்மிடமிருந்த பணத்தில் அரைவாசி வீதம் வழங்கினோம். தற்போதைய நிலையில் எங்கள் மூவரில் அதிக பணத்தொகை வைத்திருப்பவர் யார்?

.....

41) 365 நாட்களைக் கொண்ட ஒரு வருடத்தின் இறுதி நாள் வெள்ளிக்கிழமையாயின், அவ்வருடத்தின் 200 ஆவது நாள் என்ன கிழமை நாள் என எழுதுக.

.....

42) அ, ஊ, இ, எ, உ, ஆ, ஈ ஆகிய ஏழு உயிர் எழுத்துக்களையும் ஒழுங்குபடுத்த குறைந்தபட்சம் எத்தனை எழுத்துக்களை இடம்மாற்ற வேண்டும்?

.....

info@ivinstamil.com IVinsTamil iVinsTamil

43) நாக உலமாம் நள்ளோம். எனும் எழுத்துத் தொடரில் சில எழுத்துக்களை இடம் மாற்றுவதன் மூலம் நல்ல கருத்துள்ள வாக்கியம் ஆக்க முடியும். அதற்காக இடம்மாற்ற வேண்டிய எழுத்துக்கள் எவை?

.....

44) என்னிடம் தம்பியை விட இரு மடங்கு பணம் இருந்தது. நான் என்னிடம் இருந்த பணத்தில் சரி பாதியை அவனுக்கு கொடுத்தேன். அதன் பின்னர் அவன் தன்னிடமுள்ள முழுப்பணத்தொகையிலிருந்து அரைவாசியை எனக்குத் திருப்பித் தந்தான். தற்பொழுது எம்மிருவரிடமும் உள்ள பணத்தொகையைப் பற்றி ஒப்பிட்டு எழுதுக.

.....

45) 29 நாட்களைக் கொண்ட மாசி மாதத்தில் ஐந்து திங்கட்கிழமைகள் உள்ளன. அவ்வைந்து திங்கட்கிழமைகளினதும் திகதிகளினதும் கூட்டுத்தொகை யாது?

.....

46) (J, K, L), (A, B, C), (V, W, X), (G, H, I) ஆகிய ஆங்கில எழுத்துக்கூட்டங்களை முகம் பார்க்கும் கண்ணாடிக்கு முன்னால் காட்டுகின்ற போது ஒரு எழுத்து, இரு எழுத்துக்கள் மூன்று எழுத்துக்கள் மாறுபாடு அடையாது அப்படியே தெரியும் எழுத்துக் கூட்டங்களைத் தெரிவு செய்து முறையே தருக.

.....

47) ''வினா விடை வினாவ வா" இவ்வகையான வாக்கியத்தில் ஒரு தடவையாக வந்த எழுத்து மூன்று, இரு தடவைகள் வந்த எழுத்து ஒன்று, மூன்று தடவைகள் வந்த எழுத்து ஒன்று ஆகியவற்றை தெரிவு செய்து எழுதுக.

.....

48) கமலனுக்கு இப்போது வயது 9 ஆண்டுகளாக இருக்கும் போது விமலனுக்கு வயது 16 ஆண்டுகளாகும். விமலனின் வயது கமலனின் வயதைவிட இரு மடங்காக இருந்த போது அவர்கள் இருவரதும் வயதுகளின் கூட்டுத்தொகை யாது?

.....

49) ''யானை வருது, யானை வருது, அசைந்து, அசைந்து, நடந்து வருது. இப்பாடல் வரிகளில் குறைந்த தடவையும், கூடிய தடவையும் வந்த சொற்களை முறையே தருக.

.....

50) எனது தங்கை என்னை விட மூன்று வருடங்கள் மூத்தவள். எனது தம்பி என்னை விட நான்கு ஆண்டுகள் இளையவன். எனது தம்பியை விட எனது அக்கா ஏழு வருடங்கள் மூத்தவள்.

மேலுள்ள வாக்கியங்களை கருத்துள்ளதாக மாற்றுவதற்கு ஒரு சொல்லை மாத்திரம் மாற்ற வேண்டும். மாற்ற வேண்டிய அச்சொல் யாது?

.....

51) 81ஐ ஏதோ ஒரு எண்ணினால் வகுத்தாலும், 9ஐ அவ் ஏதோ ஒரு எண்ணினால் பெருக்கினாலும் ஒரே எண்ணே விடையாகக் கிடைக்கும் விடையாக கிடைத்த அவ் எண் யாது?

.....

info@ivinstamil.com IVinsTamil iVinsTamil

52) A + A + A = 9 எனவும், B + B = 10 எனவும், A + B x C = 64 எனவும் தரப்பட்டால் A + B + C = ? இன் பெறுமதி யாது?

.....

53) ஒரு தாயக்கட்டையின் மூன்று எதிரெதிர் முகங்களில் உள்ள எண்களினதும் கூட்டுத்தொகை 33 ஆகும். அத் தாயக்கட்டையின் ஆறு முகங்களிலும் இருந்த எண்கள் யாவை?

.....

54) மதன், சுதன், தமன் எனும் மூவரின் பெயர்களை BDC, ABC, DBC என ஏதோவொரு முறையாக குறிப்பிட முடியுமாயின், மன்மதன் எனும் பெயரை எவ்விதமாகக் குறிப்பிடலாம்?

.....

55) என்னுடைய தம்பிமார் ஐவர், கரன், கவின், நவின், தரன், நயன் அவர்களிடம் முறையே ரூபா. 11, ரூபா. 22, ரூபா. 33, ரூபா. 44, ரூபா. 55 என இருந்தன. அவர்களில் நால்வர் தங்களுடைய பணத்தை பாதுகாப்பாக வைக்க என்னிடம் தந்தார்கள். என்னிடம் தற்பொழுது ரூபா. 132 உள்ளது. தம்பிமாரில் பணத்தை தராதவர் யார்?

.....

56) கீதா, சீதா ஆகிய இருவர் ஓரிடத்திலிருந்து எதிரெதிரே உள்ள திசைகளில் 5 மீற்றர்கள் வீதம் சென்று கீதா தனது வலதுபக்கமாகவும், சீதா தனது இடது பக்கமாகவும் திரும்பிச் சென்று கொண்டிருந்தார்கள். அவர்கள் இருவரும் செல்கின்ற திசைகள் பற்றிக் கூறக்கூடியது யாது?

.....

57) இரு வேறுபட்ட எண்களின் கூட்டுத்தொகை 72 ஆகும். அவ்விரு வேறுபட்ட எண்களுக்கும் இடையிலான வித்தியாசம் 32 ஆகும். அவ்விரு எண்களும் எவை?

.....

58) கமலம், கும்பம், கலகம், கம்பம் ஆகிய நான்கு சொற்களிலும் எத்தனை வகையான எழுத்துக்கள் உள்ளன. அவ்வெழுத்துக்களில் அதிக பட்சமாக வந்த எழுத்து எது?

.....

59)

அ	அ	ஆ	ஆ	= .....
அ	ஆ	ஆ	ஆ	= .....
அ	இ	இ	இ	= .....
அ	ஆ	இ	இ	= .....

08 12 14 14

இத்தமிழ் எழுத்துக்கள் குறிக்கும் பெறுமானங்கள் நிரலாக கூட்டப்பட்டுள்ளன.
அதன்படி இவற்றில் புள்ளிக்கோடிட்ட இடங்களுக்குப் பொருத்தமான எண்களை எழுதுக.

.....

60) ஒரு மாத நாட்காட்டியில் 31 நாட்கள் உள்ள ஒரு மாதத்தில் ஏதோ ஒரு கோலத்தில் 5, 13, 21, 29 எனும் திகதிகள் காணப்பட்டன. அம்மாத நாட்காட்டியின் 30 நாட்கள் உள்ள அடுத்த மாதத்தின் இதே கோலத்தில் 2 இலிருந்து ஏனைய மூன்று திகதிகளும் காணப்படும் கோலத்தை எழுதுக.

.....

info@ivinstamil.com IVinsTamil iVinsTamil

61) ஒரு தேசிய பாடசாலையில் தரம் 5 வகுப்புக்கள் A, B, C, D என நான்கு பிரிவுகளாக உள்ளன. அவற்றுள் வகுப்புக்கள் A, B, C யில் 18 பெண் பிள்ளைகளும், B, C, D யில் 16 ஆண் பிள்ளைகளும் உள்ளனர். வகுப்புக்கள் A, D யில் உள்ள ஆண் பிள்ளைகளினதும் பெண் பிள்ளைகளினதும் எண்ணிக்கையானது சமமாகும். அப்பாடசாலையில் கல்வி கற்கும் தரம் 5 பெண்பிள்ளைகளின் மொத்த எண்ணிக்கை யாது?

.....

62) அப்பாடசாலையின் வகுப்புக்கள் B, Cயில் உள்ள ஆண் பிள்ளைகளின் எண்ணிக்கைக்கும், பெண் பிள்ளைகளின் எண்ணிக்கைக்கும் இடையிலான வித்தியாசம் எவ்வளவு?

.....

63) இப்புதிரில் மறைமுகமாக உள்ள கருத்துள்ள நான்கு எழுத்துச் சொல்லை கண்டுபிடித்து எழுதுக.

1) முதலெழுத்து பாதத்தில் இல்லை மாதத்தில் உண்டு
2) மூன்றாம் எழுத்து கடையில் உண்டு ஆனால் கூடையில் இல்லை
3) நான்காம் எழுத்து உயிர் எழுத்தில் இல்லை ஆயினும் மெய் எழுத்தில் உண்டு
4) இரண்டாம் எழுத்து நங்கையில் உண்டு மங்கையில் இல்லை

.....

64) கமலாவின் தாய் மாலா, தகப்பன் விமலன், மயூரன் கமலாவின் சகோதரன், குமரன், கமலாவின் மூத்த மகன். அமுதாவும், பிரபாவும் மயூரனின் இரு பிள்ளைகள்.

இக்கூற்றுக்களின்படி மாலா, பிரபாவுக்கு என்ன உறவு முறையாகும்?

.....

65) க ..... கு
கு ..... ல்
ப ..... ன்

இக்கோலத்தில் வெற்றிடமாக உள்ள இடங்களில் ஆரம்பத்தின் இறுதி எனும் கருத்துள்ள மூன்று எழுத்துச் சொல்லை மேலிருந்து கீழாக எழுதினால் இடமிருந்து வலமாக கருத்துள்ள மூன்று சொற்கள் உருவாகும். அச்சொற்களை எழுதுக.

.....

66) வேறுபட்ட இரு எண்களின் பெருக்குத் தொகை 72 ஆகும். அவ்விரு வேறுபட்ட எண்களுக்கு இடையிலான வித்தியாசம் 6 ஆகும். அவ்விரு வேறுபட்ட எண்களின் கூட்டுத்தொகை யாது?

.....

67) ஒரு சில்லறைக் கடையில் ஒரு kg சீனியின் விலை ரூபாய். 130 ஆகவும், அரைக் கிலோ தேயிலையின் விலை ரூபா. 180 ஆகவும், 250g பருப்பின் விலை ஒரு கிலோ சீனியின் விலையின் அரைவாசியாகவும் உள்ளன. அமலா அக்கடையில் இம்மூன்று பொருட்களிலும் இரண்டு கிலோ கிராம் வீதம் வாங்க கடைக்காரருக்கு கொடுக்க வேண்டிய மொத்தத் தொகை எவ்வளவு?

.....

info@ivinstamil.com IVinsTamil iVinsTamil

68) ஒரு பழக்கடையில் 396 தோடம்பழங்களை நான்கு பெட்டிகளில் சமமான எண்ணிக்கையாக அடைக்கப்பட்டுள்ளன. அதேபோல் 258 அப்பிள் பழங்களை மூன்று பெட்டிகளில் சமமான எண்ணிக்கையாக அடைக்கப்பட்டுள்ளன. நான் இரு வகையான பழங்களிலும் இரு பெட்டிகள் வீதம் வாங்கினேன். நான் வாங்கிய பழங்களின் மொத்த எண்ணிக்கை யாது?

.....

69) (689), (969), (818), (619), (808) ஆகிய ஐந்து வகையான எண்களுள் ஒன்று ஏதோவொரு வகையில் வித்தியாசமானது. அதனைத் தெரிவு செய்து எழுதுக.

.....

70) ஒரு நாள் கண்டியிலிருந்து கொழும்பு வரை சென்று திரும்பிய பேருந்து ஒன்றின் பயண விபரம் பின்வருமாறு :-

கண்டியிலிருந்த புறப்பட்ட நேரம் : அதிகாலை 4.00
இடைவழியில் உணவுத் தரிப்பிடத்திற்கு வருவதற்கு எடுத்த நேரம் : 1 மணி 25 நிமிடங்கள்
உணவுக்காக நின்ற நேரம் :- 35 நிமிடங்கள்
உணவுத் தரிப்பிடத்திலிருந்து புறப்பட்டு கொழும்பை அடைவதற்கு செலவான நேரம் : 135 நிமிடங்கள்.

இதே மாதிரியான கால அளவே திரும்பிச் செல்லவும் செலவாகிறது. அன்றைய தினம் பேருந்து இயங்கிய மொத்த மணி நேரத்தை தருக.

.....

71) விமலன் ஒரு ஆண் பிள்ளை ஆவான். அவனுடைய தங்கையான விமலாவுக்கு இரண்டு சகோதரர்களும், இரண்டு சகோதரிகளும் உள்ளனர். விமலனின் தாயாருக்கு உள்ள ஆண், பெண் பிள்ளைகளின் எண்ணிக்கை யாது?

.....

72) ஒரு தொழிற்சாலையில் கணவனும், மனைவியும் வேலை செய்தார்கள். கணவனுக்கு வாரத்தில் ஒவ்வொரு திங்கட்கிழமையும், வெள்ளிக்கிழமையும் விடுமுறை கிடைக்கும். மனைவிக்கு ஒன்றுவிட்டு ஒரு நாள் விடுமுறை கிடைக்கும். இன்று வெள்ளிக்கிழமை இருவருக்கும் விடுமுறை கிடைத்துள்ளது. இனி அவர்கள் இருவருக்கும் ஒரே நாளில் விடுமுறை கிடைப்பதற்கான சந்தர்ப்பம் அமைவது இன்றிலிருந்து எத்தனையாவது நாளில் ஆகும்?

.....

73)

1 - பென்சில், 1 - பேனா, 1 - அழிப்பான்	**விலை ரூபாய். 38**
2 - அழிப்பான், 2 - பேனா, 1 - பென்சில்	**விலை ரூபாய். 52**
1 பென்சில், 1 - கொப்பி	**விலை ரூபாய். 28**

இதன்படி ஒரு கொப்பியின் விலை யாது?

.....

74) விறகு, விளக்கு, கல்வி, புதல்வி, குந்தி, பிரம்பு, திரும்பி ஆகிய ஏழு சொற்களையும் முதற் சொல்லின் இறுதி எழுத்து அடுத்த சொல்லின் முதல் எழுத்தாக வரக்கூடிய முறையில் ஒழுங்குபடுத்தி எழுதினால் மூன்றாவதாக, ஐந்தாவதாக வரும் சொற்களை எழுதுக.

.....

75) மலேசியாவின் நேரம் இலங்கையின் நேரத்திலும் பார்க்க மூன்று மணித்தியாலங்கள் அதிகமானதாகும். மலேசியாவில் ஒரு மணிநேரம் தாமதமாகக் காட்டுகின்ற கடிகாரம் நள்ளிரவு பன்னிரண்டு மணியைக் காட்டுகின்ற போது, இலங்கையிலுள்ள ஒரு மணிநேரம் முந்திக் காட்டும் கடிகாரம் காட்டுகின்ற நேரம் யாது?

.....

76) மூன்று எண்களின் கூட்டுத்தொகை 340 ஆகும். அம்மூன்று எண்களில் முதலாவதாக உள்ள எண், இரண்டாவதாக உள்ள எண்ணிலும் முப்பது அதிகமானது ஆகும். இரண்டாவதாக உள்ள எண் மூன்றாவதாக உள்ள எண்ணிலும் இருபது அதிகமானது அகும். அம்மூன்று எண்களையும் முறையே தருக.

.....

77) ஒரு உயர்ந்த மாடிக் கட்டடம் அமைப்பதற்கு செலவாகும் காலத்தை மூன்று கட்டங்களாகப் பிரித்துக் கணிப்பிடப்பட்டது. முதற்கட்ட வேலைகளுக்காக ஒதுக்கப்பட்ட காலத்தின் இரு மடங்கு காலம் இரண்டாவது கட்டத்துக்கும், முதலிரு கட்ட வேலைகளுக்காக ஒதுக்கப்பட்ட கால அளவு மூன்றாவது கட்ட வேலைக்கும் செலவாகுமென தீர்மானிக்கப்பட்டது. முதற்கட்ட வேலை 2000 ஆம் ஆண்டு தை மாதம் ஆரம்பித்து 2002 ஆம் ஆண்டு மார்கழி மாதம் முடிவடைந்தது. திட்டமிட்டபடி அம் மாடிக் கட்டடம் எவ்வாண்டில் முழுமையாக பூர்த்தியாக்கப் பட்டிருக்கும்?

.....

78) ஒரு கோழிப் பண்ணையாளர் பண்ணையைப் பராமரிக்க கணவன், மனைவியாக இருவரை வேலைக்கு அமர்த்தினார். இருவரும் வாரத்தில் நான்கு நாட்கள் வீதம் வேலைக்கு வரவேண்டுமெனவும், கணவன் சனி, ஞாயிறு, மனைவி ஞாயிறு, திங்கள் தொடர்ச்சியாகவும் ஏனைய நாட்களில் ஒன்றுவிட்டு ஒரு நாள் ஒருவர் வேலைக்கு வரவேண்டுமெனவும் பணித்திருந்தார். அதன்படி மனைவி ஒரு வாரத்தில் வேலைகளுக்காக வந்த நாட்களை எழுதுக.

.....

79) ஒரு தேக்கரண்டி கொள்ளத்தக்க திரவத்தின் கனவளவு 5ml ஆகும். ஒரு மேசைக்கரண்டி கொள்ளத்தக்க திரவத்தின் கனவளவு 10ml ஆகும். 250ml கொள்ளத்தக்க ஒரு பாத்திரத்தில் 12 தேக்கரண்டி தேனும், 3 மேசைக்கரண்டி தேசிக்காய்ப்புளியும், 2 தேக்கரண்டி உப்புத் தண்ணீரும், 3 மேசைக்கரண்டி வெந்நீரும் இட்டுக் கலக்கிய பின் அப்பாத்திரத்தில் இன்னும் இடக்கூடிய திரவத்தின் அளவு யாது?

.....

★ **ஒரு குடும்பத்தின் தந்தையார் 1986 ஆம் ஆண்டில் பிறந்தார். மகன் 2017 ஆம் ஆண்டில் பிறந்தார். மகன் பிறக்கும் போது தாயாருடைய வயது 27 ஆண்டுகளாகும்.**

80) தாயை விடத் தந்தையானவர் எத்தனை வருடங்கள் மூத்தவர்?

.....

81) தந்தை பிறந்த ஆண்டும், மகன் பிறந்த ஆண்டும் எத்தனையாம் நூற்றாண்டு, எத்தனையாம் தசாப்தம் எனத் தனித்தனியாக முறையாக எழுதுக.

.....

82) எங்களுடைய பாடசாலையிலிருந்து 18 மாணவர்கள் கல்விச் சுற்றுப்பயணமாக தலதா மாளிகையைப் பார்வையிடச் சென்றோம். எங்களில் 12 பேர் தமிழ் பேசக்கூடியவர்கள் ஆகவும், 11 பேர் சிங்களம் பேசக்கூடியவர்கள் ஆகவும் இருந்தோம். எங்களில் சிலர் தமிழ் மட்டும் பேசக்கூடியவர்கள் ஆகவும், வேறுசிலர் சிங்களம் மட்டும் பேசக்கூடியவர்கள் ஆகவும் காணப்பட்டனர். அவர்களுடைய எண்ணிக்கைகளை முறையே தருக.

.....

83) 30 நாட்கள் கொண்ட மாதத்தில் மூன்றாவதாக வரும் வெள்ளிக்கிழமை 17 ஆம் திகதியாயின், அம்மாதத்தில் உள்ள வியாழக்கிழமைகளினதும், வெள்ளிக்கிழமைகளினதும் எண்ணிக்கைகளை எழுதுக.

.....

2kg சீனியின் விலை = 1kg, பருப்பின் விலை
2kg பருப்பின் விலை = 1kg தேயிலையின் விலை

84) இவ்விலைப் பட்டியலின் படி
1kg சீனி, 1kg பருப்பு, 1kg தேயிலை ஆகியன ரூபாய். 700 கொடுத்து வாங்கப்பட்டதாயின் சீனி, பருப்பு, தேயிலை ஆகியவற்றின் கிலோ கிராமுக்கான விலைகளை முறையே தருக.

.....

85) 366 நாட்கள் கொண்ட ஒரு வருடத்தின் இறுதி நாள் சனிக்கிழமையாயின் அவ்வருடத்திலுள்ள வெள்ளி, சனி, ஞாயிற்றுக்கிழமைகளின் எண்ணிக்கையைத் தருக.

.....

86) கனகாம்பரம் என்னும் சொல்லிலுள்ள எழுத்துக்களைச் சேர்த்து ஆக்க முடியாத சொற்சோடி எதுவெனத் தெரிந்து எழுதுக.
(கனம் - பனம்) , (காரம் - பாரம்) , (கம்பம் - காகம்) , (கானகம் - பம்பரம்)

.....

87) முதலாவதாகத் தரப்பட்டுள்ள பொருளைப் பயன்படுத்த தேவையான இரண்டாவதாக தரப்பட்டுள்ள பொருத்தமான பொருளைக் கொண்ட சொற்சோடியைத் தெரிவு செய்து எழுதுக.
(கடை - பூட்டு), (கதவு - சாவி) , (பூட்டு - திறப்பு) , கூரை - ஓடு)

.....

88) இவர்களுள் முதலாமவரை உறவு முறை கூறி அழைக்கக்கூடிய பொருத்தமான சொற்சோடியைத் தெரிவு செய்து எழுதுக.
(மகன் - தாய்), (தம்பி - அண்ணா) , (மூத்தவள் - அக்கா) , (தந்தை - மகள்)

.....

89) ஒரு கூட்டத்தில் 18 தாய்மார்கள், 10 குழந்தைகள், அவர்களுள் 6 கைக்குழந்தைகள், 7 சிறுவர்கள் நின்றார்கள். கைக்குழந்தைகளை தாய்மார் தூக்கி வைத்திருந்தார்கள். அக்கூட்டத்தில் நின்றவர்களில் நிலத்தில் கால் பதித்து நின்றவர்களின் கால்களின் எண்ணிக்கை யாது?

.....

info@ivinstamil.com IVinsTamil iVinsTamil

90) தம்பியிடம் இரண்டு ரூபாய்க்கான ரொபிகளும், ஐந்து ரூபாய்க்கான ரொபிகளுமாக ரூபாய். 23 க்கான ரொபிகள் இருந்தன. அவனிடமிருந்திருக்கக்கூடிய குறைந்த பட்ச ரொபிகளின் எண்ணிக்கையையும், அதிக பட்ச ரொபிகளின் எண்ணிக்கையையும் முறையே தருக.

.....

சோடிப் பொருட்களின் விலைகளை அவதானிக்கவும்.

1)	1kg அரிசி + 250g பருப்பு	=	ரூபாய். 200.00
2)	250g பருப்பு + 500g சீனி	=	ரூபாய். 150.00
3)	1kg அரிசி + 500g சீனி	=	ரூபாய். 190.00

91) 500g பருப்பு + 1kg சீனி விலை யாது?

.....

92) 2kg அரிசி + 500g பருப்பு + 1kg சீனி விலை யாது?

.....

93) ஒரு மாதத்தின் முதலாம் திகதி திங்கட்கிழமை ஆக இருந்தால், அம்மாதத்தின் அடுத்தடுத்த வாரங்களில் செவ்வாய்க்கிழமை, புதன்கிழமை, வியாழக்கிழமை அமையவுள்ள திகதிகளை எழுதுக.

.....

94) 613, 284, 369, 587, 762, 396, 526 இவ் எண்களை ஏறுவரிசையில் ஒழுங்குபடுத்தினால் நடுவில் உள்ள எண்ணின் நடு இலக்கத்தை, இறுதியில் உள்ள எண்ணின் இறுதி இலக்கத்தால் பெருக்கும்போது கிடைக்கும் விடை யாது?

.....

95) கல்விச் சுற்றுப்பயணமாக சென்ற 18 மாணவர்களில் 12 மாணவர்களிடம் ரூபாய். 200 ப்படியும், 4 மாணவர்களிடம் ரூபாய் 180 ப்படியும், மீதமுள்ள மாணவர்களிடம் ரூபாய். 160 ப்படியும் இருந்தன. எனவே ரூபாய் 150 வைத்திருந்தவர்களின் மொத்த எண்ணிக்கை யாது?

.....

96) நான்கு மனிதர்கள் ஒரே நேரத்தில் ஒரே இடத்திலிருந்து நான்கு திசைகளிலும் ஐந்து மீற்றர் வீதம் சென்று, அவர்கள் நால்வரும் தத்தமது வலக்கைப்பக்கத்துக்குத் திரும்பி மேலும் ஐந்து மீற்றர் வீதம் சென்று, மீண்டும் தத்தமது வலக்கைப்பக்கத்துக்குத் திரும்பி மேலும் ஐந்து மீற்றர் வீதம் சென்று நின்றனர். தற்பொழுது அவர்கள் நால்வரும் சென்ற வழிப்பாதைகளின்படி தற்பொழுது ஒருவரிலிருந்து ஒருவர் எவ்வளவு தூரத்திலுள்ளனர்?

.....

97) A, B, C, D என்னும் நான்கு நகரங்கள் ஒரு பெரும் தெருவில் தொடராக உள்ளன. அவற்றுள்
1) A நகரிலிருந்து D நகருக்கான தூரம் 90km ஆகும்.
2) B நகரிலிருந்து D நகருக்கான தூரம் 70km ஆகும்.
3) A நகரிலிருந்து C நகருக்கான தூரம் 50km ஆகும்.

இதன்படி B நகரிலிருந்து C நகருக்கான தூரம் யாது?

.....

info@ivinstamil.com IVinsTamil iVinsTamil

STUDY ONLINE

இணையத்தில் ஒரு கல்வி புரட்சி

தரம் 1 தொடக்கம்
A/L வரையான
எல்லா
தரத்தினருக்கும்
அனைத்துப்
பாடங்களையும்



இணையத்தில் கற்றுக்கொள்ளலாம்

WWW.LKEDU.LK

facebook.com/lkedulk facebook.com/groups/lkedu

ஒவ்வொரு நாளும் புதிது புதிதாக, பார்க்க மறவாதீர்கள்...

98) ஒரு நூலகத்திற்கு வந்த சுமதி 45 நிமிடங்கள் பத்திரிகைகள் வாசிப்பதற்கும், 2 மணி 35 நிமிடங்கள் புத்தகங்கள் வாசிப்பதற்கும், செலவிட்ட பின் சிற்றுண்டி சாலை சென்று 35 நிமிடங்கள் செலவு செய்த பின் மாலை 3.30 க்கு நூலகத்திலிருந்து புறப்பட்டாள். சுமதி நூலகத்திற்கு வந்த நேரத்தை நியம நேரத்தில் தருக.

.....

99) 20 படிகள் உள்ள படிக்கட்டில் ரேவதி முதலாவது படிக்கட்டிலும் பாத்திமா இருபதாவது படிக்கட்டிலும் நிற்கின்றனர். கீழிருந்து மேலாக ரேவதி ஒரு படி ஏறும் போது பாத்திமா மேலிருந்து கீழாக இரு படிகள் இறங்குவாள். ரேவதி ஏழாவது படியில் நிற்கின்ற போது பாத்திமா எத்தனையாவது படியில் நிற்பாள்?

.....

100) உட்பக்கம் தெரியாத பெட்டி ஒன்றில் மூன்று மஞ்சள் நிறப் பந்துகளும், மூன்று சிவப்பு நிறப் பந்துகளும், மூன்று பச்சை நிறப் பந்துகளும் உள்ளன. பந்துகளைப் பார்க்காமல் ஒரே நிறத்திலான இரு பந்துகளைத் தவறாமல் பெறுவதற்கு, ஒரே தடவையில் பெட்டியிலிருந்து வெளியே எடுக்கப்பட வேண்டிய பந்துகளின் குறைந்த பட்ச எண்ணிக்கை யாது?

.....

101) சாதாரண வருடமொன்றில் தை மாதம் முதலாவது திகதி திங்கட்கிழமையாயின் அவ்வருடத்திலுள்ள 100 ஆவது நாள், 200 ஆவது நாள், 300 ஆவது நாளாக வரும் மாதம் திகதி, கிழமைகளை முறையே தருக.

.....

102) 80 றம்புட்டான்கள் இடக்கூடிய ஒரு கூடையில் அண்ணா றம்புட்டான் மரத்திலிருந்து 10 றம்புட்டான்களை பறித்துக் கூடையில் இடும் போது, தம்பி 3 றம்புட்டான்களை எடுத்து தனது பையில் போடுவான். இவ்வாறாக ஒவ்வொரு தடவையும் நடைபெற்றது. அண்ணா எத்தனையாவது தடவையாக றம்புட்டான்களை பறித்துப் போடும் போது முதன் முதலாக கூடை நிரம்பிக் காணப்படும்?

.....

103) சதுர வடிவிலான மரக்கறித் தோட்டம் ஒன்றின் ஒரு பக்கத்தின் நீளம் 18 மீற்றர் ஆகும். அதன் எல்லை வழியே 3 மீற்றர் இடைத்தூரங்களில் கம்பித் தூண்கள் உள்ளன. அவ்வாறு உள்ள கம்பித் தூண்களின் எண்ணிக்கை யாது?

.....

104) கமலாவின் தற்போதைய வயது 15 ஆண்டுகளாகும். அவளுடைய வயது தங்கையான மாலாவின் வயதின் 5 மடங்காகும். இன்னும் எத்தனை ஆண்டுகளில் கமலாவின் வயது மாலாவின் வயதின் இரு மடங்குகளாக இருக்கும்?

.....

105) 50 இலிருந்து 66 வரையிலான எண்ணும் எண்களை எழுதும்போது இலக்கம் 5 எழுதப்படும். தடவைகளுக்கும், இலக்கம் 6 எழுதப்படும் தடவைகளுக்கும் இடையிலான வித்தியாசம் யாது?

.....

info@ivinstamil.com iVinsTamil iVinsTamil